மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், காரியாபட்டி.

**OS No. 215 /20 24**

வாதி/பிரதிவாதி சாட்சியின் வாக்குமூலம் திருமதி. S.தனலட்சுமி Gr –III Bench Clerk என்பவரால் ஆணையிட்டு சத்தியபிரமாணம் செய்துவைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : லட்சுமி ( வா.சா. 2 )<br>க/பெ.<br>கிராமம் :<br>தாலுகா : | சாதி :<br>மதம் :<br>தொழில் :<br>வயது : |

**20.04.2026.**

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:–**

1. எந்த சொத்திற்காக வழக்கு நடைபெறுகிறது என்று எனக்கு தெரியுமா என்றால் மாட்டுக்கொட்டகைக்காக வழக்கு நடைபெறுகிறது. சர்வே எண்.407/3 தாவா சொத்தாகும். பட்டா எண் எனக்கு தெரியாது. தாவா சொத்தின் விஸ்தீரணம் எனக்கு தெரியாது. தாவா சொத்தின் நான்குமால் வடக்கே –சுப்பாநாயக்கர் இடம், தெற்கே–எங்களது வீடு, கிழக்கே–சின்னமநாயக்கர் வீடு, மேற்கே – ரோடு உள்ளது. நான் சுமார் 40 வருடம் காலமாக சென்னையில் இருந்து வருகிறேன். தாவா சொத்து எ னக்கு எந்த முறையில் பாத்தியம் என்றால் தாவா சொத்து எனது தந்தை வாங்கிய சொத்தாகும். தாவா சொத்தை எனது தந்தை மற்றும் கிரையம் பெறவில்லை என்றால் சரிதான், வேங்கைநாயுடு, பெருமாள்நாயுடு ஆகியோர்கள் சேர்ந்து வாங்கினார்கள். வேங்கைநாயுடு, பெருமாள்நாயுடு எனது தந்தையின் உடன்பிறந்தவர்கள் என்றால் சரிதான். தாவா சொத்திற்கு தெற்கே உள்ள வீடு எவ்வாறு எனக்கு பாத்தியம் என்றால் அது எனது பூர்வீக சொத்தாகும். தாவா சொத்தை எந்த

வருடம் எனது தந்தை மற்றும் அவரது உடன்பிறந்தவர்கள் கிரையம் வாங்கினார்கள் என்றால் 1962 ம் வருடம்.

2. வா.சா.ஆ.1 ஆவணத்தின் படி தென்வடல் 19 1/2 அடி, கிழமேல் 81 அடி என்றால் சரிதான். பூமியில் தாவா சொத்தின் விஸ்தீரணம் தற்போது எவ்வளவு உள்ளது என்பது பற்றி எனக்கு தெரியுமா அது பற்றி எனக்கு தெரியாது. எனது அப்பாவுடன் பிறந்த பெருமாள்நாயுடு திருமணம் செய்யாமல் இறந்துவிட்டார். வேங்கைநாயுடுக்கு மொத்தம் நான்கு குழந்தைகள். எனது அப்பாவுடன் பிறந்த சகோதரர்களின் வாரிசுகள் தற்போது உயிருடன் தான் உள்ளார்கள். எனது தந்தை அவரது சகோதரர்களுடன் எப்போது பாகம் பிரித்து கொண்டார் என்றால் 1963 ம் வருடம் பாகம் பிரித்து கொண்டார். எங்களுக்கு பாகப்பிரிவினை படி தாவா சொத்து எனது தந்தைக்கு கொடுக்கப்பட்டது. தாவா சொத்திற்கு தெற்கே உள்ள வீடு வேங்கை நாயுடு மற்றும் எனது தந்தைக்கு பாகப்பிரிவினையில் கொடுக்கப்பட்டது. மற்ற என்ன என்ன சொத்துக்கள் பாகப்பிரிவினையில் சகோதரர்களுக்கு கொடுக்கப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

3. வேங்கைநாயுடுவிற்கு தாவா சொத்திற்கு மேற்கே உள்ள வீடு பாகத்திற்கு கொடுக்கப்பட்டது. தாவா சொத்திற்கு மேற்கே தெரு தான் உள்ளது என்றால் சரிதான், தெருவிற்கு அடுத்து உள்ள வீட்டை கொடுத்தார்கள். பாகப்பிரிவினை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான், எனது அம்மா சொல்லி தான் எனக்கு தெரியும். எனது அம்மா உயிருடன் தான் உள்ளார். அவர் பெயர் மீனாட்சி ஆகும். எனது அப்பாவிற்கு நான், 1 ம் வாதி, எனது அம்மா மட்டும் தான் வாரிசுகள் ஆவோம். எனது அப்பாவுடன் பிறந்தவர்களை விசாரித்தால் உண்மையில் பாகம் நடைபெற்றதா என்பதை

பற்றியும், எங்களுக்கு தாவா சொத்து கொடுக்கப்பட்டது என்று தெரிய வரும் என்றால் சரிதான். தாவா சொத்தில் வடக்கு பக்கம் பிரதிவாதியின் வீடு உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதியின் வீட்டிற்கு தெற்கே 2 அடி கூரையடி விட்டுள்ளார் என்றால் சரியல்ல, நாங்கள் தான் கூரையடி போட்டு அனுபவித்து வருகிறோம். காலியிடத்திற்கு எதற்காக கூரையடி போட்டோம் என்றால் மாடு கட்டி வைப்பதற்காக அவ்வாறு செய்தோம்.

4.பிரதிவாதியின் வீட்டிற்கு தெற்கே முண்டுக்கல் சுவர் கட்டியுள்ளாரா என்றால் சரிதான், ஆனால் எங்களது இடத்தில் கட்டியுள்ளார். அந்த சுவரின் அகலம் சுமார் 2 அடி இருக்கும். வருவாய் ஆவணங்களின் படி பிரதிவாதியின் வீட்டிற்கு தெற்கே உள்ள 2 அடி கூரையடி இடத்திற்கும் தெற்கே சர்க்கார் புறம்போக்கு என்று ஆவணங்களில் வகைப்படுத்தப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது, ஆனால் அது எங்களுடைய இடமாகும். தாவா சொத்தில் எனது தம்பியான 1 ம் வாதி ஆக்கிரமிப்பு செய்து ஒரு கழிப்பறை கட்டியுள்ளார் என்றும் அதனால் வந்த பிரச்சனையால் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் பிரதிவாதி வீட்டை நோக்கி ஜன்னல்கள் மற்றும் மழைநீர் தூம்பு உள்ளது என்றால் சரியல்ல, ஜன்னல்கள் மட்டும் தான் உள்ளது. நான் எதற்காக என் தம்பியுடன் சேர்ந்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது தம்பிக்கு ஆதரவாகவும், அவருக்கு பிரச்சனையின்றி சொத்தை கொடுப்பதற்காகவும் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். தாவா இடத்தில் வேங்கை நாயுடுக்கு உரிமை இல்லை என்றால் சரிதான், அவருக்கு ரோட்டிற்கு மேற்கே உள்ள இடம பாகத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. எனது அப்பாவுடன் பிறந்தவர்களை சேர்க்காததால் இந்த வழக்கு தேவையான தரப்பினர்களை சேர்க்காத தோசத்தினால் தள்ளுப்படி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. நாங்களோ, வேங்கை நாடுயுவோ தெற்கே

உள்ள வீட்டிலிருந்து வருவதற்கு தாவா சொத்தை நோக்கி வாசல், ஜன்னல், மழைநீர் தூம்பு வைக்கவில்லை என்றால் சரியல்ல, ஜன்னல் மட்டும் வைத்துள்ளோம். நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றும், அவ்வாறு ஜன்னல் எதுவும் வைக்கவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் வா.சா.ஆ.1 ஆவணம் மூலம் எங்களுக்கு எந்த உரிமையும் இல்லையென்றும், நாங்கள் தற்போது அனுபவத்திலும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.